செ. வெ. எண். 145 நாள்: 01.04.2014.

**தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகாரர்கள் பொதுக்கூட்டங்கள் நடத்திட வாகனங்கள் அனுமதி பெற ஒற்றை சாளர முறை அனுமதி பெறுவதற்கு தனி பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்.**

நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகாரர்கள் பொதுக்கூட்டங்கள் நடத்திட மற்றும் வாகனங்கள் அனுமதி பெற ஒற்றை சாளர முறை அனுமதிக்கான பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல் தெரிவித்துள்ளார்கள்.

எதிர்வரும் பாராளு மன்ற பொது தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சி வேட்பாளர்கள், பாராளுமன்ற பொது தேர்தல் 2014 தொடர்பாக பொதுக்கூட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள் ஆகியவைகள் நடத்திட அனுமதி பெறுதல், தேர்தல் பிரச்சாரங்களுக்கான ஒலி பெருக்கிகள் பயன்படுத்துதல், வாகன அனுமதி கோருதல், ஹெலிகாப்டர் இறங்கு தளம் அனுமதி கோருதல் போன்ற அனைத்து கோரிக்கைகளுக்கும் விண்ணப்பிக்க நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்பொழுது இயங்கி வரும் ஒற்றை சாளர முறை அனுமதிக்கான தனிப்பிரிவில் அதன் பொறுப்பு அலுவலர்களாக திரு.டி. ரெத்தினவேல், செயற்பொறியாளர், கட்டிடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பொதுப்பணித்துறை, நாகப்பட்டினம், திரு.ஜி. செல்வராஜ், செயற்பொறியாளர், இயக்குதலும் பராமரித்தலும், தமிழ்நாடு மின்சார வாரியம், நாகப்பட்டினம், திரு.பாண்டியன், துணை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப் பிரிவு (DCB) நாகப்பட்டினம், திரு. பி. முருகேசன், மாவட்ட தீயணைப்பு அலுவலர், நாகப்பட்டினம், திரு.செல்வராஜ், செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் ஆகிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வேட்பாளர்கள் அரசியல் கட்சியினர் நேரில் வந்து உரிய ஆவண இணைப்புகளுடன் விண்ணப்பித்து கோரும் அனுமதியினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், அனுமதிக்கான கோரிக்கை விண்ணப்பங்கள் அனுமதி கோரும் நிகழ்வுக்கு குறைந்த பட்சம் 48 மணி நேரத்திற்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும். நிகழ்வுக்கான அனுமதி கோரும் விண்ணப்பங்கள் ஒரு வாரத்திற்குள் நிகழ்வு (பொதுக்கூட்டங்கள், பேரணிகள் மற்றும் ஊர்வலங்கள்) அமையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அனுமதி கோரும் விண்ணப்பத்துடன் படிவம் 16 விண்ணப்பத்தில் அனைத்து விபரங்களும் விடபடாமல் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகப்பட்டினம்.